


24.06.2024

தலைப்புச் செய்திகள்

1. 18-வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்ச்சியுடன் இன்று தொடங்கியது.

2. ஜனநாயகத்தின் மாண்பை காக்கும் வகையில் மக்களவை உறுப்பினர்கள் செயலாற்றுவார்கள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்

3. தமிழ்நாட்டில் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், ஊரக சாலைகள், மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது.

5. உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

பிரதமர்

18-வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்ச்சியுடன் இன்று தொடங்கியது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி முதலில் உறுப்பினராக பதவியேற்றுக்கொண்டார்.

அவருக்கு இடைக்கால அவைத்தலைவர் திரு. பர்த் ருஹரி மஹ்தாப் பதவி பிரமானம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இடைக்கால மக்களவை தலைவருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்ட அவைத்தலைவர் குழுவினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

இக்குழுவில் இடம்பெற்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. சுரேஷ்,

திமுக உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு

திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுதிப் பந்தியோ பாத்யாய் ஆகியோர் பதவி ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு. அமிஷ்ரா திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் மக்களவை உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

மத்திய அமைச்சர்கள் திரு. ர்.னு. குமாரசாமி, திரு. பிரல்ஹாத் ஜோஷி ஆகியோர் கன்னட மொழியிலும்,

தர்மேந்திர பிரதான் மற்றும் ஜுவல் ஓரம் ஆகியோர் ஒடியா மொழியிலும்,

திரு. சர்பானந்த சோனோவால் அசாம் மொழியிலும்,

திரு. ராம் மோகன் நாயுடு,

திரு. ஜி.கிஷண் ரெட்டி தெலுங்கு மொழியிலும் பதவியேற்றனர்.

அமைச்சர்களை தொடர்ந்து மாநிலங்களின் அகர வரிசைப்படி உறுப்பினர்கள் பதவி ஏற்று வருகின்றனர்.

புதிய மக்களவை தேர்வு நாளைமறுநாள் நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து வரும் வியாழக்கிழமை நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசு தலைவர் திருமதி.திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

மாநிலங்களவை வரும் வியாழக்கிழமை தொடங்குகிறது.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் வரும் 3-ம் தேதி நிறைவடைகிறது.

□□□□□□□□

மக்களவை தொடர்ச்சி

முன்னதாக வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்குடன் சேவையாற்ற 18-வது மக்களவை தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

மக்களின் விருப்பங்களை பூர்த்திசெய்து, அனைவரையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டார்.

அரசு சுமூகமாக நடைபெற பெரும்பான்மை பலம் தேவை என்றாலும், நாட்டை முன்னெடுத்துச் செல்ல ஒருமித்த கருத்து இன்றியமையாதது என்றார்.

அரசியல் அமைப்பின் மாண்பை பேணி, அனைவரையும் ஒன்றிணைத்து முடிவுகளை துரிதப்படுத்தி விரைந்து முன்னேற்றப் பாதையில் செல்ல தமது அரசு விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் முதன்முறையாக மக்களவை உறுப்பினர்களின் பதவியேற்பு விழா நடைபெறுவதை பிரதமர்ஜ சுட்டிக்காட்டினார்.

உலகின் மிகப்பெரிய தேர்தல் நம்நாட்டில் மிக பிரம்மாண்டமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றதாகவும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்

நாட்டின் விடுதலைக்கு பின்னர் தமது அரசு தொடர்ந்து 3-வது முறையாக பணியாற்ற மக்கள் 2-வது முறை வாய்ப்பளித்த வகையில் 18-வது மக்களவை முக்கியத்துவம் பெறுவதாக அவர் கூறினார்.

எதிர்கட்சிகளிடமிருந்து நல்லனவற்றையே நாட்டுமக்கள் எதிர்பார்ப்பதாக சுட்டிக்காட்டியஅவர், மக்களின் எதிர்பார்ப்பு ஏற்ப ஜனநாயகத்தின் மாண்பை எதிர்கட்சிகள் பராமரிப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இடையூறுகளை ஏற்படுத்தாத பொறுப்புள்ள எதிர்கட்சியே நாட்டிற்கு தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய 18-வது மக்களவை உறுப்பினர்கள் செயலாற்றுவார்கள் என்று தாம் நம்புவதாக கூறினார்.

முன்னதாக குடியரசு தலைவர் மாளிகைளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 18-வது மக்களவையின் இடைக்கால தலைவராக திரு. பர்த் ருஹரி மஹ்தாப்பிற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆகியோர் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து மக்களவையில் புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி தொடங்கியது.

□□□□□□□

நாடாளுமன்றம்

முன்னதாக, அரசியல் சாசனத்தின் நகல்களை கையில் ஏந்தியவாறு நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த ஐ.னே.ஐ. கூட்டணி கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் குழுமினர்.

காங்கிரஸ், திமுக, திரிணமுல்காங்கிரஸ், இடதுசாரி உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்தோர், இதில் இடம்பெற்றிருந்தனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு.ராகுல் காந்தி அரசியல் சாசனத்தை மத்திய அரசு குறைத்து மதிப்பிடுவதாகவும், அதற்காகவே அரசியல் சாசன நகல்களை எதிர்கட்சி உறுப்பினர்கள் கையில் ஏந்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

□□□□□□□

காங்கிரஸ் நீட்

நீட் தேர்வு விவகாரம் குறித்து காங்கிரஸ் கட்சி மத்திய அரசை குறை கூறியுள்ளது.

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற அண்மை ரயில் விபத்து, பணவீக்க விகித பிரச்சனை போன்றவை குறித்தும் காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விவகாரங்களில் மத்திய அரசு அமைதி காப்பதாக காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

□□□□□□□

தமிழக சட்டப்பேரவை

தமிழ்நாட்டில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 10 ஆயிரம் கிலோ மீட்டர் நீள ஊரக சாலைகள், 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110-ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசியஅவர், ஏற்கனவே கடந்த 2 ஆண்டுகளில், 10 ஆயிரம் கிலோ மீட்டர் நீள கிராம சாலைகளை மேம்படுத்த, 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், இதுவரை
8 ஆயிரத்து 120 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டு இருப்பதாக எடுத்துரைத்தார்.

நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில்
9 ஆயிரத்து 324 கோடி ரூபாய் செலவில், 16 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கும் அதிகமான சாலைகள் மற்றும் 425 உயர்மட்ட பாலங்கள் அமைக்க திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.

□□□□□□□

முதலமைச்சர் கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்கள் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு இன்று அவர் எழுதிய கடிதத்தில் மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் தொடர்வதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

மேலும் விடுவிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், இலங்கையிலிருந்து கொண்டுவர அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்

மீனவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஏற்கனவே அமைக்கப்பட்ட கூட்டு பணிக்குழுவை மீண்டும் புதுப்பிப்பதோடு இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

□□□□□□□

துரைமுருகன்

ஆத்தூர் பெத்தநாயக்கன் பாளையம் வடக்கு ஒன்றியம் வில்வனூரில் உள்ள வசிஷ்ட நதியின் குறுக்கே தடுப்பணை அமைப்பதற்கான சூழல் ஏதுவாக உள்ளது என்று கண்டறியப் பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்

பேரவையில் கேள்வி ஒன்றிற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், விரிவான கள ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

துணை கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அமைச்சர், பண்ருட்டி இடகைமங்கலத்தில் தடுப்பணை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

□□□□□□□

அன்பில் மகேஷ் பொய்யாமொழி

தமிழ்நாட்டில் பள்ளி கல்வி துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதாக மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசியஅவர், பள்ளி கல்வித்துறையில் செய்யப்படும் முதலீடு வருங்காலத்திற்கான மூலதனம் என்றார்

நடப்பு கல்வியாண்டில் 3 லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர் அரசு பள்ளிகளில் சேர்ந்திருப்பதாக கூறினார்.

தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் 95 மாணாக்கர் தங்க பதக்கங்கள் வென்றுள்ளதாக அவர் கூறினார்

158 அறிவிப்புகளில் 143 அறிவிப்புகள் செயல்படுத்தப் பட்டுள்ளதாகவும் எஞ்சியவை விரைந்து செயல்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மதுரையில் தொடங்கப்பட்டுள்ள நூலகம் மூலம் நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 600 பேர் பயனடைந்து வருவதாக கூறினார்.

அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது என்றார்.

□□□□□□□

ஜி.கே.மணி

சட்டப்பேரவையில் உயர் கல்வி பள்ளிக் கல்வி, வருவாய்த் துறை ஆகிய மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசிய பா.ம.க சட்டமன்ற கட்சித்தலைவர் திரு. ஜி.கே.மணி பேரவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தார்.

இந் விவாதத்தின் போது திரு. ஜி.கே.மணி இட ஒதுக்கீடு குறித்து பேச முயன்ற போது குறுக்கிட்ட பேரவைத் தலைவர் ஏற்கனவே இந்த பிரச்சனையில் முதலமைச்சர் விரிவாக பதிலளித்திருப்பதாக கூறினார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பேச அனுமதி அளிப்பதாகவும், ஏற்கனவே 24 நிமிடங்கள் பேசியதாகவும், கூறி இதற்கு அனுமதி மறுத்தார்.

தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து திரு. ஜி.கே. மணி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

□□□□□□□

மீனவர்கள்

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 22 மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இம்மீனவர்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்தம் 3 மீன்பிடி விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதை கண்டித்து நடைபெற்ற இந்த வேலை நிறுத்த போராட்டத்தின் போது மீனவர்களை விடுவிக்க மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் மீனவ சங்கத்தலைவர் சகாயம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

□□□□□□□

விக்கிரவாண்டி

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வரும் 10-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று தொடங்கியது.

மனுக்களை திரும்பப்பெற நாளைமறுநாள் கடைசி நாளாகும். அன்றைய தினம் இறுதிவேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

□□□□□□□

அஇஅதிமுக ஆர்ப்பாட்டம்

கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக கூறி அஇஅதிமுக-வினர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான அஇஅதிமுகவினர் பங்கேற்றனர்.

திருவண்ணாமலை, நாமக்கல், தர்மபுரி, காஞ்சிபுரம், தேனி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் அஇஅதிமுக சார்பில் கள்ளச்சாராய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

□□□□□□□

அமராவதி அணை

அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மாவட்ட பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறந்துவிடப் பட்டுள்ளது.

இதன் மூலம் பழைய பாசனத்திற்கு உட்பட்ட ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்காரை, கண்ணாடி புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய 8 ராஜ வாய்க்கால்களுக்கு வரும் நவம்பர் 6-ம் தேதிவரை, 80

நாட்கள் தண்ணீர் திறப்பு, 50 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில், 2 ஆயிரத்து 704 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது

இதன் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

□□□□□□□

கிரிக்கெட்

உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் செயின்ட் லூசியாவில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இரவு 8 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது

இன்றைய போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால் அரையிறுதிக்கு தகுதிபெறும்.

முன்னதாக இன்று காலை ஆன்டிகுவாவில் சூப்பர் 8 சுற்றில் வெஸ்ட் இண்டீஸை தோற்கடித்து தென்னாப்பிரிக்கா அரையிறுதிக்குள் நுழைந்தது.

இப்பிரிவில் உள்ள இங்கிலாந்தும் 4 புள்ளிகளுடன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

வெஸ்ட் இண்டீஸ் இந்த தொடரை விட்டு வெளியேறியது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

□□□□□□□